## இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் - 2015

-----------------------------------------------------------------------

இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

#### (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

மூலதன மானியத்தின் கீழ் பெறப்பட்டிருந்த ரூபா 2,130,000 பெறுமதியான வாகனம் நிதி மானியமாக கருதி காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காசு வெளிபாய்ச்சலொன்றையும், நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காசு உட்பாய்ச்சலொன்றாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்யாமையினால் ரூபா 8,088,767 கிரயமான 205 சொத்து விடயங்கள் முழுமையாக தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் 2015 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 822,480 செலுத்தப்பட்டிருந்ததெனினும், அறிக்கை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் கணனி பதவியணியினர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்காக செலுத்தப்பட்ட முற்பணத் தொகையான ரூபா 61,200 முற்பணமாக காண்பிக்கப்படாமல், ஏனைய நிதியல்லாத நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த நிலையான வைப்புக்களுக்குரிய பெறவேண்டிய வட்டி ரூபா 129,923 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தையல் இயந்திரங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,597,880 தொகையான பெறுமதி சேர் வரித் தொகை, உற்பத்திகள் மீதான வரியில் எதிரீடு செய்வதற்குப் பதிலாக, முதலீட்டுச் செலவினமொன்றாக கருதி வீட்டுப்பாவனை புடவைக் கைத்தொழில் செயற்திட்டத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 20,212,785 கூட்டுத்தொகையான மீதிகளில் ரூபா 4,771,861 தொகையானது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது நிறுவகம் தாபிக்கப்படுகையில் ஒருங்கிணைக்கப்பட்ட புடைவை பயிற்சி மற்றும் சேவைகள் நிலையத்தின் கணக்குகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 290,441 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பெறுமதி சேர் வரியினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.5 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சு அல்லது பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி, பொறியியலாளர் படிகள், பாடசாலைப் படிகள், பாடநெறி இணைப்புப் படிகள் மற்றும் கணக்காளர் படிகளாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,546,519 மற்றும் ரூபா 2,296,108 என ரூபா 4,842,627 கூட்டு மொத்தமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள ரூபா 2,426,420 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 46,235,868 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 43,809,448 தொகையான வீழ்ச்சியொன்று காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 30,235,595 ஆல் குறைவடைந்தமை ஊழியர் வேதனங்கள் மற்றும் ஊழியர் நலன்புரிச் செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 17,147,078 ஆல் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தளம்பலுடனான நிதி மிகையொன்று தென்பட்டது. ஊழியர் வேதனம், அரச வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும் போது நிறுவனத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 69,374,663 இலிருந்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 137,931,510 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது 111,088,905 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், புடைவை மற்றும் ஆடை உற்பத்தி சார்ந்த கைத்தொழிலுக்காக ஆட்களுக்கு பயிற்சியளித்தல், ஆராய்ச்சி, ஆலோசனை செயற்பாடுகள் போன்ற சேவைகளை நிறைவேற்றுதல் நிறுவகத்தின் பிரதான செயற்பாடுகளாக இருந்ததுடன். அச்செயற்பாடுகளை நிறைவேற்றும் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடு | 2015 | 2014 | மீளாய்வாண்டில் அதிகரிப்பு/ (குறைவு) | அதிகரிப்பு மற்றும் (குறைவு) சதவீதம் |
|---|---|---|---|---|
| **பயிற்சியளித்தல்** | | | | |
| நடாத்தப்பட்ட கற்கை நெறிகளின் எண்ணிக்கை | 62 | 24 | 38 | 158 |
| பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 890 | 372 | 518 | 139 |
| பயிற்சி கற்கை நெறி வருமானம் (ரூபா மில்லியன்) | 40.83 | 13.34 | 27.49 | 206 |
| **வெளித் தரப்பினரின் வேண்டுகோளின் படி** | | | | |
| நடாத்தப்பட்ட கற்கை நெறிகளின் எண்ணிக்கை | 89 | 120 | (31) | (26) |
| பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 3,512 | 3,947 | (435) | (11) |
| பயிற்சி கற்கை நெறி வருமானம் (ரூபா மில்லியன்) | 30.60 | 42.94 | (12.34) | (29) |
| **பரிசோதனை** | | | | |
| பரிசோதனைகளின் எண்ணிக்கை | 39,424 | 65,031 | (25,607) | (39) |
| பரிசோதனை வருமானம் (ரூபா மில்லியன்) | 43.9 | 83.58 | (39.68) | (47) |
| **ஆலோசனை சேவைகள்** | | | | |
| ஆலோசனை சேவைகளின் எண்ணிக்கை | 10 | 16 | (6) | (38) |
| ஆலோசனை சேவை வருமானம் (ரூபா மில்லியன்) | 3.5 | 1.1 | 2.4 | 218 |

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 111 கற்கை நெறிகளை நடாத்துவதற்காக 1,437 மாணவர்களின் பங்கேற்பு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் 62 பாடநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. இதற்காக மாணவர்களின் பங்கேற்பு 890 ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் நடாத்தப்பட்ட கற்கை நெறிகள் மற்றும் மாணவர்களின் பங்குபற்றலிலான முன்னேற்றம், செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றை இணக்கம் செய்த போது முறையே 56 சதவீதம் மற்றும் 62 சதவீதமாகும். ஆகவே 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையினால் இலக்கிடப்பட்டிருந்த ரூபா 59,337,000 தொகையான கற்கைநெறி வருமானத்தில் ஈட்ட முடியாது போன வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 18,501,510 ஆகும். அது இலக்கிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக 31 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெளித் தரப்பினரின் வேண்டுகோளின் படி நடாத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 31 ஆல் குறைவடைந்திருந்ததுடன், அந்த காரணத்தால் கற்கைநெறி வருமானமும் ரூபா 42.94 மில்லியனிலிருந்து ரூபா 30.60 மில்லியன் வரையான 29 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) நிறுவகத்தால் திட்டமிடப்பட்ட பாடநெறிகளை நடாத்துதல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், துறைசார்ந்த அபிவிருத்தியை நோக்காக கொண்டு பாடநெறிகளை ஒழுங்கமைத்தல், துறையில் ஈடுபட்டுள்ளோரிடையே போதியளவிலான மேம்படுத்தல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு பயிற்சி பிரிவுகளினதும் செயன்முன்னேற்றம் தொடர்பில் அவ்வப்போது கட்டுப்பாட்டுச் சபையின் கவனத்திற்கு கொண்டு வரல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் வருமானம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பரிசோதனைகளின் எண்ணிக்கை 25,607 இனாலும் பரிசோதனை வருமானம் ரூபா 39.68 மில்லியன் அல்லது 47 சதவீதத்தாலும் குடைவடைந்திருந்தது. பாடசாலைச் சீருடை பரிசோதனை வருமானம் முன்னைய ஆண்டினை விட ரூபா 35.30 மில்லியனால் குறைவடைந்தமை இது தொடர்பில் விசேடமாக தாக்கமளித்திருந்தது.

(உ) இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம் 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2009 இன் 12 ஆம் இலக்க புடவை மற்றும் ஆடை நிறுவக அதிகாரச்சட்டத்தின் பகுதி 01 இன் 04 (அ) பந்தியின் பிரகாரம் புடவை மற்றும் ஆடை துறை தொடர்பான பட்டப்பின் படிப்பு மற்றும் இளநிலைப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சர்வதேச மற்றும் தேசிய நியமங்களுக்கும் நிறுவகத்தின் நியமக் கட்டமைப்பிற்கு இணங்கவும் புடவை மற்றும் ஆடை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அனுகூலச் சான்றிதழ்களை வழங்குதல், நிறுவகத்தின் இலக்கான போதிலும், நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்படும் கற்கைநெறிகளுக்காக தேசிய தொழிற்தகைமை நிலையினை (NVQ) பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையிலுள்ள ஜீப் வண்டியொன்று கைத்தொழில்கள் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சிடமிருந்து 2014 ஆம்

ஆண்டின் நவம்பர் மாதம் தற்காலிக அடிப்படையில் நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக ரூபா 362,175 தொகை பழுதுபார்த்தல் செலவினமாக நிறுவகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையை அடைந்திராமையால் மீண்டும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்ட பணத்தை கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்திற்கு 1991 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் மானியமாக கிடைத்திருந்த 02 வாகனங்களில் சட்டபூர்வமான உரித்தினை கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான மனிதவள அபிவிருத்திக்காக ரூபா 1,500,000 தொகையான திறைசேரி நிதி ஒதுக்கீடு மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், திறைசேரியின் அங்கீகாரமின்றி வெளிநாட்டுப் பயிற்சிக்கான செலவினம் மேற்கொண்டமையால் வெளிநாட்டுப் பயிற்சிக்காக செலவிடப்பட்ட ரூபா 1,098,500 தொகையினை திறைசேரியிடமிருந்து மீளளிப்பு செய்ய முடியாதிருந்தது.

(ஈ) 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் காணாமல் போயிருந்த ரூபா 400,223 கூட்டுத்தொகையான 3 கணனிகள் தொடர்பில் பரிசோதனைகள் நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கும் கணக்குகளில் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கையின் பிரதிநிதித்துவ நிறுவனமொன்றின் ஊடாக விஞ்ஞான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தின் காலத்தினை நீடிப்பு செய்தல், உரிய தரகு மற்றும் டெலக்ஸ் கட்டணங்களுக்காக ரூபா 63,413 தொகை செலவிடப்பட்டிருந்ததெனினும், இந்த விஞ்ஞான உபகரணங்கள் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தால் ரூபா 30,000,000 மற்றும் நிறுவகத்தினால் ரூபா 15,000,000 செலவிடப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலமுனை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புடவை நிர்மாண பயிற்சி சாயம் பூசுதல் மற்றும் சந்தைப்படுத்தல் நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரொருவர் மற்றும் பொய்லர் இயக்குநர்களை ஆட்சேர்த்தல் மற்றும் உரிய பணிகள் தொடர்பில் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுத்திராமையால் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு சலுகை விலையில் நூல் விநியோகித்தல், நியாயமான விலையில் கைத்தரி இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குதல், தரமான பரிசோதனை சேவையொன்றினை வழங்குதல், உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புக்களையும் ஏற்றுமதி மேம்படுத்தல் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தல், நிலையத்தினுள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அலகொன்றினை ஏற்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு முரணாக பத்திரிகை அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 263,200 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய நியமனத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் சேவையில் நிரந்தரமாக்கும் பொருட்டு பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஏதேனுமொரு தகைமையொன்றினை பெற்றுக்கொள்வதற்காக அல்லாதவிடத்து, தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தரொருவர் கல்வி அல்லது பயிற்சிகளுக்காக வெளிநாடொன்றிற்கு அனுப்பி வைக்கப்பட கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தகுதிகான் காலப்பகுதியிலுள்ள நிறுவகத்தின் நான்கு உத்தியோகத்தர்களை வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் மாநாடொன்றில் பங்குபற்றச் செய்து அதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 442,648 செலவிடப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் அங்கத்துவம் வகிக்கும் பல்வேறு தொழிற்சங்க நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய வருடாந்த அங்கத்துவக் கட்டணங்களுக்காக நிர்வாக சபையின் அங்கீகாரமொன்று இல்லாமல் மீளாய்வாண்டினுள் ரூபா 101,257 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி நிறுவகத்தின் உத்தியோகத்தர்களால் பின்பற்றப்படும் பட்டப்பின் படிப்பு மற்றும் பல்வேறு பாடநெறிகளுக்காக உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் பாடநெறிக் கட்டணங்களாக மீளாய்வாண்டினுள் நிறுகவத்தினால் ரூபா 555,201 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிறுவகத்தின் வளங்கள்

2012 ஆம் ஆண்டின் போது நிறுவகத்திற்கு பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 7,500,000 பெறுமதியான கெப் வண்டி 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக வரிசை அமைச்சின் பயன்பாட்டிற்காக 2013 செப்தெம்பர் 04 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அவ் வாகனங்களின் பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 910,472 கூட்டுத்தொகையான செலவினம் நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த தொகையினை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் உத்தியோகத்தரொருவர் இந்தியாவில் நடைபெறும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றும் செலவினத்திற்காக இலங்கை மன்றத்திற்கு ரூபா 140,000 தொகையான பணம் நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், காரணங்களைக் குறிப்பிடாமல் இந்த வெளிநாட்டுச் சுற்றுலாவினை இரத்துச் செய்தமையால் மேற்படி வழங்கிய பணத்தில் ரூபா 92,464 தொகை நிறுவகத்திற்கு கிடைக்காமல் போயிருந்தது.

(ஆ) நிறுவகத்தினால் 2014 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மன்னார் பயிற்சி கிளையில் 2015 ஆம் ஆண்டினுள் எதுவித வருமான மூலமொன்றும் இல்லாமல் பராமரிப்பு செலவினமாக ரூபா 1,870,111 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2014 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சி நிறுவகத்தினை பராமரிப்பதற்காக ரூபா 1,036,259 தொகை வருமானத்தை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மார்ச் 23 ஆந் திதகி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் ஒப்பந்த அடிப்படையில் சேவைபுரிந்த 09 உத்தியோகத்தர்கள் நிரந்தரப் பதவிகளில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல்வழிக் கோவையின் 154 ஆம் பிரிவின் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற நபர்களை மீள அரச சேவையில் ஈடுபடுத்தும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது ஓய்வு பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தரொருவர், நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலப்பகுதிக்காக மதியுரையாளரொருவர் ஆட்சேர்க்கப்பட்டு அதற்காக ரூபா 565,125 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------

தற்போது உள்ளகக் கணக்காய்விற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக போதியளவிலான பதவியணியினரை நியமித்து ஆக்கபூர்வமான கணக்காய்வொன்றினை மேற்கொள்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

-----------------------------------

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 (அ), (ஆ), (இ) மற்றும் (உ) இன் பிரகாரம் கொள்வனவு நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக எதிர்பார்த்த கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அடுத்த ஆண்டிற்கான கொள்வனவு செயற்பாடுகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பிரதான கொள்வனவுத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் நாளதுவரையாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகம் அதற்கமைய கொள்வனவுத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் இணக்கம் செய்யும் போது, 08 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2012 ஒக்டோபர் 16 ஆம் திகதிய மற்றும் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளைப் படி ஆடைக் கைத்தொழில் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஆடைத்துறை தொடர்பான ஆரம்ப ஆய்வொன்று மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை தவிர வேறெந்த நடவடிக்கைகளும் இப் பிரிவினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கடன்களை அறவிடல் | 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,771,861 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கான செயற்பாட்டு நடைமுறையொன்று இன்மை. |
| (ஆ) | வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகள் நடாத்தல் | ஒவ்வொரு பதவிகளுக்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |